

விஷம்
ஒரு துளி போதாதா?




தலைவர் கலைஞர்

விஷம்;
ஒரு துளி போதாதா?



தலைவர் கலைஞர்



ஒரே மாதத்தில் பணிகளைச் செய்து சாதனை படைத்த இதுபோல ஒரு அரசைக் காட்ட முடியுமா? என்று தமிழகச் சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா 31-1-2012 அன்று சவால் விட்டிருக்கிறார். யாரிடம் சவால் விட்டிருக்கிறார் என்றால் தே.மு.தி.க. புகாருக்கு மறுப்புக் கூறி சவால் விட்டிருக்கிறார். எந்தத் தே.மு.தி.க.? கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் எந்தத் தே.மு.தி.க.வுடன் தோழமை பூண்டு வெற்றி பெற்று, ஆட்சியைக் கைப்பற்றினார்களோ, அந்தத் தே.மு.தி.க.வின் தலைவரைப் பார்த்து - சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து - அவர் அருவறுக்கத்தக்க வகையில் நடந்து கொண்டதாகவும், அவருடன் கூட்டணி

வைத்துக் கொண்டதற்காக வருத்தப்படுவதாகவும் கூறியிருக்கிறார். இந்த மாபெரும் சாதனையை வேறு எந்த ஆட்சியிலும் காண முடியாததுதான்! ஜெயலலிதா ஒருவரால்தான் இத்தகைய மாபெரும் சாதனையைச் செய்து காட்ட முடியும்.

முதலமைச்சர் இந்த ஒரு சாதனையை மட்டும் தான் செய்திருக்கிறாரா? முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இந்த ஏழு மாதங்களில் ஆறு முறை அமைச்சரவையை மாற்றிய இமாலய சாதனையைப் போல வேறு எந்த ஆட்சியிலும் செய்யப்படவில்லைதான். எட்டு மாத காலத்தில் 9 அமைச்சர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்ட சாதனை என்ன? இருபது இலாகாக்கள் கைமாறியிருக்கின்றன. சட்டத்துறைக்கு மட்டும் மூன்று அமைச்சர்கள் - உணவுத் துறைக்கு மூன்று பேர் மாறியிருக்கிறார்கள். ஒரு வாரம் மட்டுமே பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருந்த அக்ரி கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஒரு வாரம் மட்டுமே வருவாய்த் துறை அமைச்சராக இருந்த எஸ்.பி.வேலுமணி ஆகியோர் நீக்கப்பட்ட சாதனை வேறு எங்கேயாவது உண்டா? கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சராக இருந்து, பின்னர் ஏதோ ஒரு தவறுக்காக அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்ட என்.ஆர். சிவபதி மீண்டும் அமைச்ச ராகியிருக்கிறார். அப்படியென்றால், ஏற்கனவே அவர் செய்த தவறு சரியாகி விட்டதா?

அமைச்சர்கள் மட்டுமல்ல - அ.தி.மு.க. ஆட்சியிலே அதிகாரிகளின் நிலைதான் என்ன? எந்த ஆட்சியிலும் அதிகாரிகள் மாற்றம் என்பது சகஜம்தான். ஆனால் தற்போது நிலை என்ன? கலெக்டர்கள் எந்த அளவிற்கு பந்தாடப்படுகிறார்கள்? காவல் துறை அதிகாரிகளின் மாற்றம் எந்த அளவிற்கு நடைபெறுகிறது? ஏன் முதலமைச்சருடைய பாதுகாப்பு அதிகாரிகளின் நிலை என்ன?

கோவை மாவட்ட கலெக்டர் கருணாகரன் ஆறே மாதங்களில் மாற்றப்பட்டார். நேர்மையாக அங்கே பணியாற்றி வந்ததாகவும், நிர்வாகக் காரணங்களுக்காக இல்லாமல், ஆளுங்கட்சிப் பிரமுகரின் நிர்ப்பந்தம் காரணமாக அவரை விடுமுறையில் செல்லுமாறு கட்டாயப்படுத்தப்பட்டு மாற்றப்பட்டு விட்டார் என்றும் ஏடுகளிலே செய்தி வந்தது. கோவை கலெக்டராக அரிகரன் என்பவரை நியமனம் செய்து அவர் அங்கே சென்று பொறுப்பேற்றுக் கொண்டு சில நாட்கள் தான் பணியாற்றினார். அதற்குள் அவரை மீண்டும் பழைய பதவிக்கே மாற்றி விட்டு, ஏற்கனவே அந்த மாவட்டத்தில் பணியாற்றி, கட்டாய விடுப்பில் செல்லுமாறு பணிக்கப்பட்ட கருணாகரனை கோவை கலெக்டராக பணி நியமனம் செய்துள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டராக இருந்த சிவசண்முகராஜா, ஒருசில மாதங்கள் மட்டுமே பணியாற்றிய நிலையில் ஜனவரி மாதத் துவக்கத்தில் கட்டாய விடுப்பில் செல்ல அறிவுறுத்தப்பட்டார். அந்தப் பதவிக்கு சென்னை மாநகராட்சி வருவாய் மற்றும் நிதிப் பிரிவு துணை கமினராக இருந்த ஹனிஷ் சாப்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

தானே புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட கடலூர் கலெக்டர் திருமதி அமுதவள்ளி 20.1.2012 அன்று நிவாரணப் பணிகள் வேகமாக நடைபெற்ற நேரத்தில் திடீரென்று மாற்றப்பட்டார். என்ன காரணம்? நிவாரணப் பணிகள் சரியாக நிறைவேற்றப்பட வில்லை என்று அரசே கருதிய காரணத்தால்தானே அந்தக் கலெக்டர் சில மாதங்களிலேயே மாற்றம் செய்யப்பட்டார்?

சென்னை கலெக்டராக திருமதி எஸ்.மதுமதி நியமிக்கப்பட்டார். The post of Chennai Collector has been lying vacant for more than six months. This could well be the longest period when the seat has remained unoccupied. V. Shobana, the last Chennai Collector, was transferred to Karur on June 6. 2011. ஆறு மாதத்திற்கு மேலாக தலை நகர் சென்னைக்கு கலெக்டர் நியமிக்கப்படவில்லை. மாவட்ட வருவாய்த் துறை அலுவலரே கலெக்டர் பொறுப்பு வகித்தார். அவர் தோட்டக் கலைக்குச் சொந்த மான நிலத்தை தனியார் ஒருவருக்கு தாரை வார்த்தார். அதனை முரசொலியில் நான் எழுதிக் காட்டிய பிறகு மீண்டும் மீட்கப்பட்டது. பிறகு கடந்த வாரம் சென்னை மாவட்டத்திற்கு திருமதி. மதுமதி புதிய கலெக்டராக அறிவிக்கப்பட்டு, அவர் பொறுப்பேற்றுக் கொண்டார். என்ன நிலை? சென்னை மாவட்டக் கலெக்டராக மதுமதி பொறுப்பேற்று இரண்டு நாட்கள் கூட ஆகவில்லை. அவரை அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் இத்தகைய சாதனைகளை வேறு எந்த ஆட்சியிலாவது காண முடியுமா?

திருமதி டி.சபீதா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் ஏற்கனவே அ.தி.மு.க. ஆட்சியில், முதல் அமைச்சருக்கு நெருக்கமாக பணியாற்றியவர் என்று சொல்லப்பட்ட போதிலும், தி.மு.கழக ஆட்சியிலே அவரை பள்ளிக் கல்வித் துறைச் செயலாளராக நியமனம் செய்தோம். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே இவர் திடீரென மாற்றம் செய்யப்பட்டார். எத்தனை மாதங்கள்? ஒரு சில மாதங்களில் அவரை மீண்டும் பள்ளிக் கல்வித் துறை செயலாளராக மாற்றியிருக்கிறார்கள். முதலில் அவரை ஏன் மாற்றினார்கள்? பிறகு ஏன் அதே பதவியில் நியமனம் செய்தார்கள்?

அதுபோலவே, தமிழகத்தில், 6 பல்கலைக்கழகங்களில் தற்போது துணைவேந்தர் பதவிகள் காலியாக உள்ளன. துணை வேந்தர்களை நியமிப்பதற்கான தேர்வுக் குழுக்கள் இன்னும் அமைக்கப்படவில்லை. இதுபோல், தமிழக உயர்க் கல்வி மன்றத்தில், துணைத்தலைவர், உறுப்பினர் - செயலர், உறுப்பினர்கள் இல்லாமல், வெற்றுக் கூடாரமாக உள்ளது. மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பதவி மட்டுமல்ல, பதிவாளர் பதவியும் காலியாக உள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதிவாளர் பதவி காலியாக உள்ளது. கல்லூரிக் கல்வி இயக்குனர், மண்டல இயக்குநர் பதவிகளும் காலியாகவே உள்ளன. இத்தகைய சாதனைகளை வேறு ஆட்சியிலே காண முடியுமா? முடியாதுதான்.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் 3-6-2011 அன்று படித்த ஆளுநர் உரையில்; அ.தி.மு.க. அரசு தேவையான நடவடிக்கைகளை கடுமையாக மேற்கொண்டு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, மக்கள் அச்சமின்றி வாழ்க்கை நடத்த வழிவகுக்கும் என்று சொன்னார்கள். என்ன நிலை?

தமிழகத்தில் கொலை நடக்காத நாட்கள் உண்டா? கொள்ளை நடக்காத நாட்கள் உண்டா? வழிப்பறி, செயின் பறிப்பு எத்தனை, எத்தனை? மே 13, 2011 முதல் அக்டோபர் 14, 2011 வரையில் 154 கொலைகள், 165 கொள்ளைகள், 102 செயின் பறிப்புகள், 27 வழிப்பறிச் சம்பவங்கள் தமிழகத்தில் நடைபெற்றுள்ளன.

கடந்த மாதம் வரை முதலமைச்சருக்கு மிக மிக வேண்டியவர்கள். ஆண்டுக்கணக்கில் அவருடன் ஒன்றாக ஒரே வீட்டில் இருந்தவர்கள். தற்போது அவருக்கு வேண்டியவர்கள் எல்லாம் தேடப்படுவோர் பட்டியலில்! அவர்கள் மீது தொடர் குற்றச்சாட்டுகள்! அந்தக் குற்றச்சாட்டுகளுக்குக் காரணம் என்ன? முதலமைச்சருக்கு வேண்டியவர்கள் என்பதால் அந்தக் குற்றங்களைச் செய்தார்கள் என்றால், அந்தக் குற்றச்சாட்டுகளில் முதலமைச்சருக்கும் தொடர்பு இருக்கிறதா இல்லையா? இத்தகைய சாதனை வேறு எந்த ஆட்சியிலேயாவது நடைபெற்றது உண்டா?

முதலமைச்சர் பொறுப்பிலே உள்ள - தமிழகக் காவல் துறையின் திறமைக்கு ஒரே ஒரு உதாரணம் - முதலமைச்சருக்கு மிகவும் வேண்டிய - தற்போது வேண்டாத - திவாகரன் என்ற தனிப்பட்ட ஒரு வரைத் தேடுவதற்காக 2 கூடுதல் கண்காணிப் பாளர்கள், 4 துணை கண்காணிப்பாளர்கள், 9 இன்ஸ்பெக்டர்கள் என்று 9 தனிப்படைகள் அமைக்கப்பட்டு கடந்த ஒரு மாதமாகத் தேடி வருவதாகவும், இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை என்றும் சொல்லப்படுகிறது. இதே தவறு தி.மு.கழக ஆட்சியிலே நடைபெற்றிருந்தால், ஜெயலலிதா எத்தனை முறை கையாலாகாத மைனாரிட்டி அரசு என்று அறிக்கை வெளியிட்டிருப்பார்? பன்னீர்தான் பதில் அளிக்க வேண்டும்!

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த ஏழெட்டு மாதங்களில் செய்த சாதனைகளைப் போல வேறு ஒரு அரசைக் காட்ட முடியுமா? இதோ சில சாதனைகள் -

1. தலைமைச் செயலகத்தை இடமாற்றம் செய்தது.

2. பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகத்தை மாற்றியது.

3. சமச்சீர் கல்வித் திட்டத்தை ரத்து செய்து சட்டம் இயற்றியது.

4. தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்பதை மாற்றியது.

5. அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை குழந்தைகள் நல மருத்துவமனையாக மாற்றப் போவதாக அறிவித்தது.

6. முத்தமிழ்ப் பேரவைக்கு இடம் கொடுத்ததை ரத்து செய்தது.

7. மேலவை ரத்து தீர்மானம்.

8. மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ரத்து செய்தது.

9. குடிசை வாழ் மக்களுக்கான காங்க்ரீட் வீடு வழங்கும் திட்டத்திற்கு மூடுவிழா நடத்தியது.

10. கழக முன்னணியினர் மீது நடவடிக்கை - குண்டர்கள் சட்டம் - முன்னணியினர் இல்லங்களில் சோதனை நடவடிக்கைகள்.

11. ஆட்சிக்கு வந்தவுடன் வரிகள் - பால்விலை உயர்வு - பேருந்துக் கட்டணம் உயர்வு - மின் கட்டணத்தை உயர்த்த பரிந்துரை.

பல ஆய்வுகளுக்குப் பிறகு, பல குழுக்கள் பரிந்துரைக்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட சமச்சீர் கல்வி பாடத் திட்டத்தை

200 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து அச்சடிக்கப்பட்ட சமச்சீர் கல்வி பாடத் திட்டப் புத்தகங்களையெல்லாம் நாங்கள் ஏற்க மாட்டோம், பழைய பாடத் திட்டம் தான் என்று சொன்னதோடு நிற்காமல் சட்டப் பேரவையிலேயே அவசர அவசரமாக சட்டத் திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றியது!

இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடை பெற்றபோது, நீதியரசர்கள் எஸ்.ராஜேஸ்வரன், திருமதி.கே.பி.கே.வாசுகி ஆகியோர் சமச்சீர் கல்விச் சட்டத்தின் நோக்கம் மிகத் தெளிவானது, சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஆய்வுக்குழு விரிவாக ஆராய்ந்து, சமச்சீர் கல்வி முறையை அமல்படுத்த பரிந்துரை செய்துள்ளது, அந்தக் குழுவின் பரிந்துரைகளை எளிதாகப் புறக்கணித்து விட முடியாது. இது தவிர, ஏற்கனவே பெரும் தொகை செலவிடப்பட்டுள்ள நிலையில், மேலும் பெரும் தொகையைச் செலவிடுவது அவசியம்தானா? இவைப்பற்றி யெல்லாம் அட்வகேட் ஜெனரல் அரசுக்கு தக்க ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

அதற்குப் பிறகும், தமிழக அரசு இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றது. உச்சநீதிமன்ற நீதியரசர்கள் பி.எஸ்.சவுகான், சுதந்திரகுமார் ஆகியோர் அளித்த தீர்ப்பில், 1 மற்றும் 6ஆம் வகுப்புகளுக்குக் கொண்டு வரப்பட்ட சமச்சீர் கல்வி தொடர்ந்து அமல்படுத்தப்பட வேண்டும். அதை இடையில் நிறுத்தினால் குழப்பம் ஏற்படும். 2 முதல் 5ஆம் வகுப்பு வரையும், 7ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையும் இந்த ஆண்டே சமச்சீர் கல்வியை அமல்படுத்த வேண்டும். அந்தப் பாடத்

திட்டத்தில் குறைபாடுகள் இருப்பின் அதுகுறித்து ஆராய நிபுணர் குழு நியமிக்கப்பட்டு, அந்த நிபுணர் குழு தனது அறிக்கையை 2 வார காலத்தில் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

சென்னை ஐகோர்ட்டும் வழக்கை தொடர்ந்து விசாரித்து, உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும், மற்றொரு நீதிபதியும் அளித்த தீர்ப்பில், மாநில அரசு அதனுடைய அதிகார வரம்பை மீறியுள்ளது என்று கூறுவதற்கு எங்களுக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை. தமிழக அரசு கொண்டு வந்த சட்டத்திருத்தம் செல்லாது. அதை ரத்து செய்கிறோம். சமச்சீர் சட்டத்தின்கீழ் வரும் கல்விக்கான பாடப் புத்தகத்தை மாணவர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும் என்றெல்லாம் கூறினார்கள்.

இந்தத் தீர்ப்பையும் எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றம் சென்றது. உச்சநீதிமன்றம் தனது இடைக் கால உத்தரவில் சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு தடை விதிக்க முடியாது, 2-8-2011க்குள் சமச்சீர் பாடப் புத்தகங்களை விநியோகிக்க வேண்டும் என்று தெரிவித்தது. அதையும் தமிழக அரசு மதித்து சமச்சீர் பாடப் புத்தகங்களை விநியோகிக்கவில்லை. தமிழக அரசின் வழக்கறிஞர் சமச்சீர் கல்வியை நடப்பாண்டிலேயே அமல்படுத்துவதற்கான சாத்தியங்கள் இல்லை என்றார். உச்சநீதி மன்றத்தில் சமச்சீர் கல்வி வழக்கின் இறுதி விசாரணை, நீதிபதிகள் பாஞ்சல், தீபக் வர்மா மற்றும் சவ்ஹான் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் நடைபெற்றது. எடுத்த எடுப்பிலேயே, நீதிபதிகள், தி.மு.க. அரசின் சமச்சீர் கல்விச்

சட்டம் செல்லும் என்று 2010ஆம் ஆண்டே உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்த பின்னரும் - சமச்சீர் கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்க தமிழக அரசு, சட்டத் திருத்தம் கொண்டு வந்தது ஏன்? அதற்கான அவசியம் என்ன? என்று கேட்டனர். அரசுக்காக வாதாடிய வழக்கறிஞர் பி.பி. ராவ் அவர்களே, தமிழக அரசுக்கு சரியான சட்ட ஆலோசனை வழங்கப்படவில்லை, தேவையில்லாத சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து பிரச்சினையில் சிக்கிக் கொண்டுவிட்டோம் என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

நீதிபதிகள் இறுதியாக வழங்கிய தீர்ப்பில், சமச்சீர் கல்வியை பத்து நாட்களுக்குள் அமல்படுத்த வேண்டும், எந்த வொரு சட்டத்தையும் ஆட்சி மாற்றம் காரணமாக மாற்றக் கூடாது, எதிர்கால விளைவுகளைக் கருத்தில் கொண்டே எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும், அரசியல் கட்சிகள் தங்களது விருப்பு வெறுப்புகளுக்காக கல்வி முறையை மாற்றக் கூடாது என்று கூறி, தமிழக அரசின் மனுவினை தள்ளுபடி செய்தார்கள். ஜெயலலிதாவிற்கு விழுந்த முதல் சம்மட்டி அடியாகவே இந்தத் தீர்ப்பு கருதப்பட்டது. இதுபோன்ற சான்றிதழ் வேறு எந்த அரசுக்காவது பதவிக்கு வந்த ஆறே மாதங்களில் கிடைத்தது உண்டா? இது ஒரு சான்றிதழ்தானா?

பேரறிஞர் அண்ணா நினைவு நூலகத்தை ஜெயலலிதா எழும்பூரில் உள்ள டி.பி.ஐ. வளாகத்திற்கு மாற்றப்போவதாக அறிவித்தார். அதுகுறித்த வழக்கில் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதன்மை அமர்வு இப்படி ஒரு அருமையான, நவீன

வசதி கொண்ட, நேர்த்தியான முறையில் உருவாக்கப்பட்ட சிறந்த நூலகத்தை இடம் மாற்றம் செய்வது ஏன்? மருத்துவமனை கட்டுவதென்றால் மெரினா கடற்கரையில் கட்டலாமே! அரசின் இந்த முடிவு உள் நோக்கம் கொண்டது என்று குறிப்பிட்ட நீதிபதி கள், நூலகத்தை மாற்றுவது குறித்து விளக்கம் அளித்திட அரசுக்கு நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டனர்.

டி.என்.ராஜரத்தினம் நினைவு முத்தமிழ்ப் பேரவைக்காக கழக ஆட்சியில் கொடுக்கப்பட்ட இடத்தைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சியிலே ஜெயலலிதா அரசு ஈடுபட்டபோது, நீதியரசர் என்.பால் வசந்தகுமார் ஒரு கையில் நிலத்தைக் கொடுத்து விட்டு, மறு கையில் நிலத்தைப் பறிப்பது எந்த விதத்தில் நியாயம்? ஆட்சிகள் மாறினாலும் அரசு ஒன்றுதானே? ஏன் திடீரென்று இப்படி முடி வெடுத்தீர்கள்? இதை நான் நிறுத்தி வைக்கிறேன். தாங்கள் வேண்டுமானால் பதில் மனுவினை நான்கு வாரத்தில் தாக்கல் செய்யலாம் என்று கூறி பொதுப் பணித்துறை அனுப்பிய நோட்டீசுக்கு இடைக் காலத் தடை விதித்தார். இப்படி ஜெயலலிதாவின் சாதனைகளை எழுதிக் கொண்டே போகலாம்.

மக்கள் நலப் பணியாளர்கள், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை, பணி நீக்கம் செய்து தமிழக அரசு கடந்த 8-11-2011ந் தேதி உத்தரவிட்டது. இதற்கான வழக்கில் நீதிபதி சுகுணா, பணி நீக்க உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தார். 21-11-2011 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, கோர்ட் உத்தரவு நிறைவேற்றப்படவில்லை, மக்கள் நலப் பணியாளர்களை பணியில் சேர்க்கவில்லை என்று கூறப்பட்டது. உடனடியாக அவர்களை பணியில் சேர்க்க அனுமதிக்க வேண்டுமென்றும்,

கோர்ட் உத்தரவை நிறைவேற்றியதற்கான அறிக்கையை 23ஆம் தேதி தாக்கல் செய்ய வேண்டுமென்றும் நீதிபதி சுகுணா உத்தரவிட்டார். நீதிபதி சுகுணா பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு மனு தாக்கல் செய்தது. அதனை விசாரித்த தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதல் பெஞ்ச், முதலில் மாதம் 200 ரூபாய் தொகுப்பூதியம் அடிப்படையில், 1990ஆம் ஆண்டு மக்கள் நலப் பணியாளர்கள் நியமிக்கப் பட்டனர். 1991ஆம் ஆண்டு அரசு மாறியதால் அவர்கள் நீக்கப்பட்டனர்.

1997ஆம் ஆண்டு, அடுத்த அரசு வந்தபின், இவர்கள் 500 ரூபாய் தொகுப்பூதியத்தில் மீண்டும் நியமிக்கப்பட்டனர். 2001ஆம் ஆண்டு அரசு மாறியவுடன் இவர்கள் மீண்டும் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். 2006ஆம் ஆண்டு அடுத்த அரசு வந்த பின், 1000 ரூபாய் தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்டனர். மக்கள் நலப் பணியாளர்கள் நியமனம், நீக்கம் என அரசின் விருப்பத்துக்கு ஏற்ப நடந்துள்ளது தெரிகிறது. இவர்கள் அனைவரும் தற்காலிகப் பணியாளர்கள் என வாதத்துக்கு கருதினாலும் கூட கடந்த 20 ஆண்டுகளாக பணியாற்றி உள்ளனர்.

ஒரு கையெழுத்தில் அவர்களை பணி நீக்கம் செய்ய வேண்டியிருந்தால் நீதியின் கொள்கைப்படியும், சட்டப்படியும் அவர்களை நீக்கும் முன்பு அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அரசு கருத்து கேட்கவில்லை. இதைக் கருத்தில் கொண்டு தான் தனிநீதிபதி சுகுணா இந்த வழக்கில் தடை உத்தரவை சரியாகப் பிறப்பித்துள்ளார். அதை நீக்க முடியாது. மக்கள் நலப் பணி யாளர்களின் நிலையைப் பார்க்கும்போது கால்பந்து விளையாட்டு போல உள்ளது. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி சம்பளம் நிர்ணயம்

செய்து ஒருவருக்கு அரசு பணி வழங்கிய பிறகு சரியான காரணம் இல்லாமல் அவரை நீக்குவது சட்ட விரோதமானது. இதை வன்மை யாகக் கண்டிக்கிறோம். அரசு மாறும் போது மாறி மாறி உத்தரவு பிறப்பிப்பது கடும் கண்டனத்துக்குரியது, வேதனையானது, வருந்தத்தக்கது. எனவே அரசு கோரிக்கையை நிராகரிக்கிறோம். கடந்த ஆட்சியின் திட்டத்தில் மாற்றம் கொண்டு வந்தால் வந்த ஊழியர்களை வேறு பணியில் அமர்த்த வேண்டும், அதை விட்டு விட்டு அவர்களை டிஸ்மிஸ் செய்வது தவறு. இது எந்த விதத்தில் நியாயமானது. இது அரசியல் சார்புடையது என்பது தெரியும். இருந்தாலும் அதற்குள் நாங்கள் தலையிட விரும்பவில்லை என்று கூறினார்கள்.

ஆனால் தமிழக அரசின் சார்பில் இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்கள். உச்சநீதிமன்றத்தில் 29-11-2011 அன்று நீதிபதிகள் டி.கே.ஜெயின், தவே ஆகியோர் இந்த மனுவை விசாரித்து, தமிழகத்தில் என்னதான் நடக்கிறது? ஆட்சி மாறும்போது முந்தைய அரசின் திட்டங்களை ரத்து செய்வது ஏன்? என்று கண்டனம் தெரிவித்தார்கள். இந்தச் சாதனையைப் போல வேறு எந்த ஆட்சியிலாவது நடந்தது உண்டா? இவ்வளவிற்குப் பிறகும் மக்கள் நலப் பணியாளர்களை பணியிலே அமர்த்தாமல் அப்பீலுக்குப் போவேன் என்கிறதே தமிழக அரசு! அந்த ஒரு சாதனை போதாதா?

ஜெயலலிதா, ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக வரவு செலவுத் திட்டத்தை அவையிலே வைப்பதற்கு முன்பாகவே தமிழக மக்கள் தலையில் சுமார் 4000 கோடி ரூபாய் அளவிற்கு வரியைச்

சுமத்திவிட்டு; அத்துடன் இல்லாமல் இப்போது எல்லா மட்டத்திலும் வரி உயர்வு - பஸ் கட்டண உயர்வு - பால் விலை உயர்வு - என்று பல உயர்வுகளை அறிவித்திருக்கிற சாதனைகள்தான் எத்தனை, எத்தனை? வேறு எந்த ஆட்சியிலாவது எட்டே மாதங்களில் இவ்வளவு சாதனைகளைப் புரிய முடியுமா?

கடந்த காலங்களில் ஜெயலலிதா விடுத்த ஒவ்வொரு அறிக்கையிலும், தமிழ்நாடு மின்வாரி யத்தை தி.மு. கழக அரசும், முதல் அமைச்சராக இருந்த நானும் சீர்கேடு அடையச் செய்து விட்ட தாக தொடர்ந்து குற்றஞ்சாட்டி விட்டு, தற்போது வரலாற்றில் இல்லாத அளவிற்கு மின் கட்டணங்களை உயர்த்த பரிந்துரை செய்திருக்கும் ஜெயலலிதாவின் சாதனையைப் போல வேறு யாராவது செய்ய முடியுமா?

இந்த ஆட்சியில் நடைபெறும் ஊழல் விவகாரங் களையெல்லாம் இடம் இல்லாததால் பிறகு பட்டியலிடுகிறேன். அரசினால் நடத்தப்படும் டாஸ்மாக் பொதுத்துறை நிறுவனத் திற்கு வர வேண்டிய வருவாய் ஆளுங்கட்சியினருக்குத் திருப்பி விடப்படுவதாக கடுமையான குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆட்சிக்கு வந்த ஆறு மாத காலத்தில் டாஸ்மாக் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இவரை மூன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளார்கள். அதற்குக் காரணமே ஊழல் தான் என்று சொல்லப்படுகிறது. Favouritism Alleged" என்ற தலைப்பில் ஆங்கில நாளிதழ் ஒன்று (26-11-2011) வெளியிட்ட செய்தியில், "Tasmac incurs loss in Tirupur - The State-run Tasmac, which operates retail liquor shops across the State, has allegedly showed favours to ruling party members in

awarding bars, unmind ful of the revenue loss it caused.

(திருப்பூரில் டாஸ்மாக் நிறுவனத்திற்கு இழப்பு - மாநிலத்தில் சில்லறை மதுபான விற்பனைக் கடைகளை நடத்தி வரும் அரசு நிறுவனமான டாஸ்மாக் தனக்கு வரும் இழப்பைப் பற்றிக் கவலைப்படாமல், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு பார்களை வழாங்குவதில் சலுகை காட்டுவதாகச் சொல்லப்படுகிறது.)

A reply given to an RTI petition filed by Mr. M. Karthikeyan, President of Tirupur District Bar Owners Association, has revealed that Tasmac has been incurring Rs. 60 lakh monthly loss in Tirupur alone owing to alleged irregularities in awarding bar tenders.

திருப்பூர் மாவட்ட பார் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு. எம்.கார்த்திகேயன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு செய்து பெற்ற விவரத்தின்படி திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் பார் டெண்டர்கள் வழாங்கியதில் காட்டப்பட்ட முறைகேடுகளால் டாஸ்மாக் நிறுவனத்துக்கு மாதம் ஒன்றுக்கு 60 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுவது வெளிவந்துள்ளது.)

Tirupur district generated a profit of Rs. 61.10 lakh every month from the 250 IMFL shops during the previous fiscal, while it has gone down to Rs. 1.66 lakh per month from the 209 shops under operation in the current financial year, the RTI reply reveals.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கிடைத்துள்ள செய்தி; கடந்த நிதி ஆண்டில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 250

டாஸ்மாக் கடைகளை டெண்டர் மூலமாக கொடுத்ததில், மாதம் 61.10 லட்சம் ரூபாய் அரசுக்கு இலாபம் கிடைத்து வந்தது. தற்போது இந்த நிதி யாண்டில் செயல்பட்டு வரும் 209 கடைகள் மூலம் மாதம் ஒன்றுக்கு 1 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மட்டுமே வருவாய் கிடைக்கும்)

For instance, shops No. 1906, 1923, and 1927 located on P.N. Road, Kovai Main Road and Mangalam Road, have been auctioned for just Rs. 100 more than the upset price. Most of the shops were auctioned for less than Rs. 1000 more than the upset price, the RTI reply revealed.

(உதாரணமாக, பி.என்.சாலை, கோவை மெயின் சாலை, மங்கலம் சாலை ஆகிய இடங்களில் உள்ள டாஸ்மாக் கடை எண்கள் 1906, 1923, 1927 ஆகியவை நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலையை விட வெறும் 100 ரூபாய் அளவிற்கே ஏலம் விடப்பட்டுள்ளது. பெரும் பாலான கடைகளை ஏலம் விடப்பட்ட போது குறைந்தபட்ச விலையை விட ஆயிரம் ரூபாய்க்குக் குறைவான தொகைக்கே ஏலம் விடப்பட்டுள்ளன)

Mr. Karthikeyan attributed the loss to deliberate undervalue of the auction price by local Tasmac officials to favour ruling party members. Of the 41 shops not auctioned this year, most were withheld only to favour nearby shops awarded to members of the ruling Al ADMK, he charged, adding that several applications were received after the deadline on the night before opening the tenders. Those who questioned the irregularities were

booked under charges of bootlegging. (Deccan Chronicle-26/11/2011).

(உள்ளூர் அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு சாதகமாக டாஸ்மாக் அதிகாரிகள் ஏலத் தொகையை வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டதால் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று திரு. கார்த்தி கேயன் கூறுகிறார். 41 கடைகளை ஏலம் விடாததற்குக் காரணம், அவற்றின் அருகில் அ.தி.மு.க.வினரின் பார்கள் இருப்பதால், அவர்களுக்கு சாதகம் செய்வதற்காகவே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குற்றம் சாட்டுகிறார். மனுக்கள் வந்து சேர வேண்டிய காலத்திற்குப் பிறகு டெண்டர் திறக்கப்படுவதற்கு முந்தைய நாள் இரவோடு இரவாக பல விண்ணப்பங்கள் பெறுவதற்காகவும் இந்த முறைகேடுகளை தட்டிக் கேட்டவர்களை கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பதாக பொய்க்குற்றச் சாட்டில் கைது செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.)

நெடுஞ்சாலைத் துறையிலே நடைபெற்ற டெண்டர் பற்றி ஆளுங்கட்சி ஆதரவுப் பத்திரிகை ஒன்றில் 27-11-2011 வெளியிட்ட செய்தியில், விழுப்புரம் நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில், 24, 25ஆம் தேதி களில் விழுப்புரம், கடலூர், அரியலூர் மாவட்டங்களில் சாலைப் பணிகளுக்கான டெண்டர் நடந்தது. மாலை 3 மணியுடன் டெண்டர் நேரம் முடிந்தது.

இருப்பினும் மாலை 5 மணிக்கு விழுப்புரம் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில், அ.தி.மு.க. பிரமுகர்களின் கார்கள் அணிவகுத்து நின்றன. டெண்டர் நேரம் முடிந்தும், கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில் கூட்டம்

அதிகம் இருந்ததால், ஒரு பத்திரிகை போட்டோகிராபர் படம் எடுத்தார். இதைப் பார்த்த கண்காணிப்புப் பொறியாளர் சிவக்குமார் மற்றும் அலுவலகப் பணியாளர்கள், டெண்டர் எடுக்க வந்திருந்த கட்சிப் பிரமுகர்களுடன் சேர்ந்து போட்டோகிராபரை, அறைக்குள் வைத்து கதவைப் பூட்டினர். புகைப்படத்தை டெலீட் செய்யுமாறு கூறி மிரட்டினர். டெண்டர் நேரம் முடிந்து இரண்டு மணி நேரமாகியும் அ.தி.மு.க. பிரமுகர்கள், கண்காணிப்புப் பொறியாளர் சிவக்குமார் அறையில், தனிமையில் பேசியதை போட்டோ எடுத்ததால், ஆத்திரமடைந்த அதிகாரிகள், போட்டோகிராபரை மிரட்டியதோடு, படங்களை டெலீட் செய்ய வைத்து வெளியே அனுப்பினர்.

இரு தினங்கள் நடந்த டெண்டரில், அமைச்சர்களின் பரிந்துரை எனக் கூறி, சிலருக்கு பணியை வழங்க முடிவு செய்தனர். இதனால் மற்ற விண்ணப்பதாரர்களை அழைத்து, அடுத்த முறை உங்களுக்குப் பணி வழங்குகிறோம் என்று கூறி நிராகரித்தனர். சிலருக்கு அதிகாரிகளே குறிப்பிட்ட தொகை கொடுக்கச் செய்து, அவர்களை சரிக் கட்டினர். ஸ்பீடு போஸ்டில் வந்த 165 தபால்களை நேரத்தில் வாங்கி, டெண்டரை முறையாக நடத்தாமல் நிராகரித்து, போட்டியின் பலத்தைக் குறைத்து, தங்கள் விருப்பத்திற்கேற்ப டெண்டரை ஒதுக்கியுள்ளனர். இதனால் அரசுக்கு கூடுதலாக பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என, மூத்த காண்ட்ராக்டர்கள் தெரிவித்தனர். டெண்டரில் கணிசமான தொகை கை மாறியதால், தரமான முறையில் சாலை பணிகள் நடக்குமா என்பதிலும் சந்தேகம் எழுந்துள்ளது. மேலும் அந்த இதழில் செய்திகள் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது. அரசின் செயல்பாடு களுக்கு இதெல்லாம் ஒருசில உதாரணங்கள்.

திருக்கோவிலூர் அருகில் மண்டபம் என்ற ஊரில் இருளர் இனத்தைச் சேர்ந்த நான்கு பெண்களை நள்ளிரவில் போலீசார் பலாத்காரம் செய்ததை யொட்டி, சென்னை ஐகோர்ட்டில் வக்கீல் புகழேந்தி புகார் மனு அளித்தார். மனுவை விசாரித்த தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் போலீசாரின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். பெண்களை நள்ளிரவில் கைது செய்தது தவறு என்று அரசு வக்கீல் கூறியதை ஏற்றுக்கொள்கிறோம். பாதிக்கப்பட்ட பெண்களை உடனே மருத்துவ சோதனைக்கு அனுப்பாமல் ஒரு மாதத்துக்கு பின்பு அனுப்புவீர்களா? உடனடியாக அனுப்பி அதன் அறிக்கையை கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டும் என விழுப்புரம் எஸ்.பி.க்கு உத்தரவிடுகிறோம். 2 வாரத்தில் அரசு விரிவான பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

பரமக்குடியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு திரு. ஜான் பாண்டியன் வரவிருந்ததை தேவையில்லாமல் தமிழக அ.தி.மு.க. அரசு தடுத்து தடை விதித்தது. அப்பாவிப் பொதுமக்கள் மீது குறிப்பாக ஆதிதிராவிடர்கள்மீது காவல் துறையினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு நடத்தியதில், அந்த இடத்தி லேயே 6 பேர் அநியாய மாக சுட்டுக் கொல்லப்பட்ட னர். ஏராளமானவர்கள் படுகாயமடைந்து இன்னமும் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சையும் பெற்று வருகின்றனர். இதுபோன்ற சாதனை வேறு எந்த ஆட்சியிலாவது உண்டா?

இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், அ.தி.மு.க. அரசு கழகத்தினர் மீதும், முன்னாள் அமைச்சர்கள் மீதும் பொய் வழக்குகளைப் புனைந்து கைது நடவடிக்கைகளை

மேற்கொள்கிறது. வழக்குகளைப் போடுகிறது. அது போன்ற சாதனையைத்தான் வேறு எந்த ஆட்சியாவது செய்திட முடியுமா?


அ.தி.மு.க. ஆட்சியில் காவல் துறை விவகாரங் களில் கட்சிக்காரர்கள் தலையிடமாட்டார்கள் என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறினார். அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஒரு மாதத்திற்குள் சென்னையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. சென்னையிலே 12-6-2011 அன்று நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவரும், ஏன் அமைச்சர் ஒருவரும் காவல் நிலையத்திற்கே அதுவும் இரவிலே சென்று காவல் நிலையத்தில் காவல்துறையினரால் பிடித்துவைக்கப்பட்டிருந்த ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஏழு பேரை வீட்டிற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். காவல்துறை துணை கமினர் மீது ஒரு அமைச்சரே புகார் கூறியிருக்கிறார். நியாயமாக நடவடிக்கை எடுத்த காவல் துறை அதிகாரி ஒரே நாளில் பட்டாலியனுக்கு மாற்றப்பட்டுவிட்டார். என்னே நியாயம்? இந்த ஒரு சாதனை போதாதா?

இப்படி நான் எழுதிக் கொண்டே போகலாம்! எழுதாமல் இருக்கலாம் என்றுதான் எண்ணினேன். அம்மை யார், பேரவையில் சாதனை பற்றி சவால் விட்டதாக ஏடுகள் எல்லாம் எழுதிய காரணத்தால், உடனடியாக என் நினைவுக்கு வந்தவைகளை இங்கே பட்டியலிட்டுள்ளேன். இந்த ஆட்சியின் சாதனைகளில் இது ஒரு துளிதான்! விஷம்; ஒரு துளி போதாதா?

அன்புள்ள,

மு.க.

தலைவர் கலைஞர் அவர்கள்
காஞ்சிபுரத்தில் மொழிப்போர் தியாகிகளின்
வீர வணக்க நாள் கூட்டத்தில்
ஆற்றிய வீர உரை



தலைவர் கலைஞர்



காஞ்சிபுரத்தில் எத்தனையோ கூட்டங்களில் நான் பேசியிருக்கின்றேன். அண்ணாவின் கட்டளையை ஏற்று பேசிய கூட்டங்கள், நடத்திய ஊர்வலங்கள் ஆகியவற்றையும் கண்டிருக்கிறேன். அருமைச் சகோதரர் சி.வி.எம்.அண்ணாமலை, மாவட்டச் செயலாளராக இருந்து நடத்திய கூட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கின்றேன். மறைந்த மதுராந்தகம் ஆறுமுகம் மாவட்டக் கழகச் செயலாளராக இருந்து இங்கு நடத்திய கூட்டங்களையும் பார்த்திருக்கின்றேன் - கலந்து கொண்டிருக்கின்றேன். கே.டி.எஸ்.மணி, கண்டோன்மென்ட் சண்முகம் போன்றவர்கள் கழகத்தின் பொறுப்பாளர்களாக இருந்து நடத்திய கூட்டங்களையும் பார்த்திருக்கின்றேன். ஆனால், இன்றைய கூட்டம் அவ்வளவு பேரும் ஒன்று சேர்ந்து நடத்தினால் எப்படி இருக்கும் என்ற கேள்விக்குப் பதிலாக கடல்போல் காஞ்சிபுரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது (பலத்த கைதட்டல்) என்பதை நான் பார்க்கின்ற

போது புலிகேசியை வீழ்த்துவதற்காக போர்க் கோலம் பூண்டு புறப்பட்ட காஞ்சித் தலைவன் நரசிம்மவர்மனுடைய பட்டாளத்தைப் போல் (பலத்த கைதட்டல்) நீங்களெல்லாம் எழுச்சி முரசாங்களாக இங்கே வீற்றிருக்கின்ற இந்தக் காட்சியை நான் காணுகின்றேன்.

நம்முடைய தம்பி தா.மோ.அன்பரசனுடைய ஏற்பாட்டில், நம்முடைய கழக மாவீரர்கள், கழக நிர்வாகிகள் செய்துள்ள அலங்காரங்கள், மின் விளக்குகள், வானவேடிக்கைகள் இவ்வளவையும் நான் பார்த்தபோது, நாம் ஆட்சியை இழந்தாலும், தோற்றுப் போனாலும் மக்கள் நம் பக்கம்தான் இருக்கிறார்கள் - அவர்கள் என்னை மாத்திரமல்ல - என் தலைமையிலே உள்ள இந்தக் கழகத்தைக் கைவிடமாட்டார்கள் என்ற நிறைந்த நம்பிக்கையோடு உங்கள் முன்னால் நான் வீற்றிருக்கின்றேன்.

இந்த நாள் வீர வணக்க நாள்! யாருக்கு? மொழி காக்கப் புறப்பட்டு இன்னுயிர் தந்த நம்முடைய இனிய உடன்பிறப்புகளுக்கு நாம் வணக்கம் செலுத்துகின்ற நாள். 1965ஆம் ஆண்டு திருச்சி மாவட்டத்தில் கீழப்பழூர் சிங்கத் தமிழன் சின்னச்சாமியும், சென்னை விருகம்பாக்கத்தில் சிவலிங்கமும், அரங்கநாதனும், திருச்சி அய்யம்பாளையம் வீரப்பன், சத்தியமங்கலம் முத்து, மாயவரம் மாணவன், சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, சிவகங்கை ராஜேந்திரன், கோவை பீளமேடு தண்டபாணி.

அதன்பிறகு 1986ஆம் ஆண்டில் கட்டாய இந்தியை எதிர்த்து உயிர் நீத்த போடி முருகன், அல்லூர் காளிமுத்து, மேலூர் ஜெகஜீவன் ராம், அரியலூர் புகழேந்தி, உளுந்தூர்பேட்டை பன்னீர்

செல்வம், நீடாமங்கலம் கோவிந்தராஜன், குளித்தலை சீனிவாசன், கோவை பால சுப்பிரமணியம், கூடுவாஞ்சேரி சுப்பிரமணியம், காட்டுமன்னார்கோவில் கலிய பெருமாள், சேலம் அருணாசலம், மருதூர் மூக்கன், கலைஞர் பித்தன், அருப்புக்கோட்டை மாரியப்பன், சுந்தரப்பட்டி வேதமாணிக்கம், முள்ளிப்பட்டு நடராஜன் ஆகியோர் தமிழ்காக்க தங்கள் உயிரை தணலிலே இட்டு, கொள்கைத் தங்கங்களாக நம்முடைய உயிரோடு கலந்த உடன்பிறப்புக்களாக ஒன்றிவிட்ட நிலையை எண்ணிப் பார்த்து, காஞ்சியிலே கூடி இருக்கின்ற இந்தப் பல்லாயிரக்கணக்கான, மக்கள் கூட்டத்திலே இருந்தவாறு அவர்களுக்கெல்லாம் என்னுடைய தலைதாழ்ந்த வணக்கத்தை (பலத்த கைதட்டல்) நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சேர, சோழ, பாண்டியர்களின் வழித்தோன்றல் திராவிட இனம்!

அவர்கள்; இப்படி ஒரு நாள் காஞ்சிபுரத்திலே கருணாநிதியை வைத்துக் கூட்டம் நடத்துவார்கள் - அந்தக் கூட்டத்திலே நாமெல்லாம் நன்றி காட்டுகின்ற வகையிலே அந்த மக்கள் வாழ்த்துக் கூறுவார்கள்; என்று எதிர்பார்த்து தீயிலே பாய்ந்தது இல்லை - மண்ணிலே புதைந்தது இல்லை - விஷமருந்தி செத்ததில்லை. ஏன் மருந்தினார்கள் என்றால், வேள்வித் தீயை தங்களுடைய உடலிலே போர்த்திக் கொண்டு உயிர் நீத்தார்கள் என்றால், தமிழுக்கு வந்த ஆபத்தை வரக்கூடிய ஆபத்தை தடுத்து நிறுத்த நம்முடைய தமிழ் மண்ணில் தமிழ் இல்லாமல் போய்விடவில்லை;

அவன் பாண்டியன் பரம்பரையிலே வந்தவன் - சோழனின் சொந்தக்காரன் - சேரனின் உடன்பிறப்பு; இவர்களெல் லாம் மூவேந்தர். மூன்று கொடி, மூன்று தமிழ் என்று மூன்று கடல் சூழ்ந்த இந்த திராவிட நிலத்தை ஆண்டு கொண்டிருந்தவர்கள் - அவர்களுடைய வழித்தோன்றல்களாம் - இன்றைய தமிழர்களுக்கு அவர்களுடைய மொழியை, நான் மொழி என்று சொல்லுகின்றேன்; மாற்றிக் கொள்ள வேண்டும் - அவர்களுடைய உயிரை - அவர்களுடைய மூச்சை - அவர்களுடைய சுவாசத்தை (பலத்த கைதட்டல்) பிடித்து நிறுத்த வேண்டும் என்று தமிழ் மொழியை பின்னுக்குத் தள்ளி, இந்தி மொழி 1938ஆம் ஆண்டு இங்கே அடியெடுத்து வைத்தது. அப்பொழுது இங்கே பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல், நான் 14 வயதுடைய பள்ளி மாணவன். அன்றைக்கு, ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள் - நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இது அல்லவே! வீரத்தமிழ் கொஞ்சும் நாட்டிலே காரமில்லா சொற்கள் ஏற்க மாட்டோம் வீட்டிலே என்று பரணி பாடியவன், அந்தப் பரணியை எழுதி மாணவர்களுடைய பவனிக்குத் தந்தவன். (கைதட்டல்)

ஆனால், இன்றைக்கு என்னுடைய வயது 88 என்றால் (பலத்த கைதட்டல்) மொழிக்காக மாத்திரம் ஏறத்தாழ 74 ஆண்டு காலமாக போராடி வருகின்றேன். பெரியார் கையைப் பிடித்துக் கொண்டு போராடினேன் - அண்ணாவின் கையைப் பிடித்துக் கொண்டு போராடினேன் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் தளகர்த்தர்கள் அணிவகுப்பிலே ஒருவனாக நின்று போராடினேன். அந்தப் போராட்டம் எல்லாம், நடந்து நடந்து, முடிந்து முடிந்து இன்றைக்கும் இங்கே ஒரு நண்பர் சுட்டிக்காட்டியதைப் போல் முழுமையான குறிக்கோளை எட்டினோமா என்றால் இல்லை. மொழிக்காக போராட

எல்லா கட்சியினருக்கும் உரிமை உண்டு!

இந்தி ஆதிக்கம் வேண்டாம், தமிழ் காப்பாற்றப்பட வேண்டும் என்பது இங்கே ஒருவர் சொன்னதைப் போல், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாத்திரம் உரிய கொள்கை என்று நான் சொல்ல மாட்டேன். வேறு கட்சிக்காரர்களைப் பார்த்து நம்முடைய நண்பர்கள் - நாங்கள் போராடினோம் - புழு போலத் துடித்தோம் - சிறைப்பட்டோம் - சித்ரவதைக்கு ஆளானோம், இவ்வளவு தியாகங்களைச் செய்த நாங்கள் இன்றைக்கு மொழிப் போராட்ட வீரர்களுக்கு வணக்கம் செலுத்த உரிமை உடையவர்கள்.

இந்த உரிமை வேறு கட்சிக் காரர்களுக்கு இல்லை என்பது போல பேசினார்கள். நான் சொல்லுகின்றேன் - எல்லாக் கட்சிக்காரர்களும் இந்த உரிமையை அவர்களே எடுத்துக் கொண்டு நம்மோடு இணைந்தால், நாம் இந்த ஒரு பிரச்சினையிலாவது கட்சி வேறுபாடு இன்றி எல்லோரும் தமிழர்கள், திராவிட சமுதாயத்தினர், பெரியாரால் வளர்க்கப்பட்டவர்கள், அண்ணாவின் வழி வந்தவர்கள் என்ற அந்த ஒன்றை ஏற்றுக் கொண்டு, மொழிப்போரில் மொத்தத் தமிழினமும் இன்றைக்கு குதிக்குமேயானால், நம்முடைய இறுதி இலட்சியங்களும் நிச்சய மாக நிறைவேறும்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ன சொல்லுகிறது? இந்தியாவிலே உள்ள எல்லா மாநில மொழிகளும், மத்தியிலே ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும். தமிழ் உள்ளிட்ட எல்லா மாநில மொழிகளும், இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும். என்ன சிக்கல்? எப்படி முடியும் என்று கேட்பவர்கள் என்ன சொல்கிறார்கள்?

இந்தியாவிலே உள்ள மாநில ஆட்சி மொழிகளை யெல்லாம், மத்திய ஆட்சி மொழியாக்கினால் எப்படி தொடர்பு கொள்ள முடியும் என்று கேட்கிறார்கள். இதை தெலுங்கர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? கர்நாடகத்திலே ஏற்றுக் கொண்டார்களா? குஜராத் மக்கள் ஏற்றுக் கொண்டார்களா? மராத்திய மக்கள், மலையாளிகள் ஏற்றுக் கொண்டார்களா? என்று கேட்பார்களேயானால், அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிற வரையில் நாம் பொறுத்திருப்போம். ஆனால், அவர்கள் ஏற்றுக் கொள்ளுகின்ற அளவிற்கு முதல் மொழியாக முதல் கட்டமாக மத்திய ஆட்சி மொழியாக தமிழ் மொழியை சிம்மாசனத்திலே உட்கார வைப்போம். (பலத்த கைதட்டல்)

மராட்டியர்களுக்கு அந்த உணர்வு வரும் - மலையாளிகளுக்கு அந்த உணர்வு வரும் - நம்மை விட அதிக உணர்வு பெற்றவர்களாகக் கூட மலையாளிகள் முன்வருவார்கள். ஏன் என்றால், முல்லைப் பெரியாறில் அவர்கள் காட்டுகின்ற வேகத்தையும், அவர்கள் கடைப்பிடிக்கின்ற தீவிரத்தையும் நாம் உணர்கின்றோம். எனவே, முதலில் எல்லா வளமும் பொருந்திய; இலக்கண வளம், கலை வளம், நாகரிகம், பண்பாடு இப்படி அத்தனை வளங்களும் பொருந்திய தமிழ் மொழியை முதலில் மத்திய ஆட்சி மொழியாக ஆக்குங்கள். அதற்குப் பிறகு வேண்டுமானால், உங்களுக்கு பிரியம் இருந்தால், யார் யார் தங்களையெல்லாம் அந்த வரிசையிலே சேர்க்க வேண்டும் என்று எண்ணுகிறார்களோ, அவர்களையெல்லாம் சேர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் தமிழ் மொழியை எதற்காக வளப்படுத்த வேண்டும் எனபதற்காக காலம் கடத்தாதீர்கள்.

எங்கள் மொழி உலகத்திலே மூத்த மொழி. எந்த மொழிக்கும் ஈடாக இந்த மொழியைச் சொல்ல முடியாது. எந்த

மொழியும் இந்த மொழிக்கு ஈடில்லை. ஆகவே, தமிழை இந்தியாவின் மத்திய ஆட்சி மொழியாக ஆக்குங்கள் - நான் என்னுடைய 14 வயதில் தொடங்கிய இந்தப் போராட்டம் இன்றைக்கு முடிந்துவிடவில்லை. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் போராட்டத்தை நான், தந்தைப் பெரியாருடைய கையைப் பிடித்துக் கொண்டு தொடங்கினேன் - அறிஞர் அண்ணாவின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டு தொடங்கினேன். இன்று பெரியாரும் இல்லை - அண்ணாவும் இல்லை. அவர்கள் என்னுடைய இதயத்திலே இருக்கிறார்கள். (பலத்த கைதட்டல்)

அந்த இதயத்தை தொட்டுச் சொல்லுகின்றேன். அவர்களுக்கு நானும் நீங்களும், தமிழ் மக்களும் ஆற்ற வேண்டிய கடமை என்ன? அதை எண்ணிப் பாருங்கள். 1938ஆம் ஆண்டு இந்த போராட்டம் நடைபெற்றபோது, தமிழக சட்டப் பேரவையில் அன்றைக்கு முதலமைச்சராக இராஜாஜி வீற்றிருந்தார். அவர் என்ன சொன்னார்?

இந்தியை ஆதரித்த
ராஜாஜியையே மாற்றியது
பெரியார், அண்ணாவின் முழக்கம்!

இந்தியை எதிர்ப்பவர்கள் யார்? ஒரு ஈ.வெ.ராவும், ஒரு சோமசுந்தர பாரதியும்தான் இந்தியை எதிர்க்கிறார்கள். வேறு யாரும் இல்லை என்று சொன்னார். அப்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தவர் பன்னீர்செல்வம். நான் சொல்லுகின்ற பன்னீர்செல்வம் வேறு. (பலத்த கைதட்டல்). நான் அடையாளம் காட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்லுகின்றேன், சார். ஏ.டி.பன்னீர் செல்வம்.

ஓமான் கடலிலே விமானம் விழுந்து தமிழர்களையெல்லாம் தவிக்க விட்டு மறைந்தாரே அந்த பன்னீர்செல்வம்

அவர் 38ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தார். அவர்களைப் பார்த்துதான் மூதறிஞர் ராஜாஜி சொன்னார், ராஜகோபாலாச்சாரியார் சொன்னார், நீங்கள் இந்தியை எதிர்க்கிறீர்கள். ஆனால் இந்தி எதிர்ப்பாளர்களாகிய உங்களுக்கு மெஜாரிட்டி கிடையாது. ஒரே ஒரு ஈ.வெ. ராமசாமி பெரியாரும், இன்னொரு சோமசுந்தர பாரதியாரும் ஆக இந்த இரண்டு பேரும்தான் இந்தியை எதிர்க்கிறீர்கள்.

ஆகவே, நீங்கள் மைனாரிட்டி என்றார். உடனே, ஏ.டி. பன்னீர் செல்வம் எழுந்து சொன்னார். முதலமைச்சர் அவர்களே நான் சொல்வதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு பேர் தான் இந்தியை எதிர்க்கிறார்கள் என்று கேலி செய்கிறீர்கள் - ஆனால், இரண்டு பேர் எதிர்க்கிறார்கள். அந்த இந்தியைக் கொண்டு வருபவர் நீங்கள் ஒருவர்தான். இரண்டு பெரிதா - ஒன்று பெரிதா? என்று பார்த்தால் நீங்கள் மைனாரிட்டி - இரண்டு பேர் வேண்டாம் என்கிறார் கள் அவர்கள் மெஜாரிட்டி என்று சொன்னார். (பலத்த கைதட்டல்) இவைகளெல்லாம் ஏட்டிலே பதிவானவை. சரித்திரக் குறிப்புகளிலே அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டவை. இவைகளையெல்லாம் சொல்லுவதற்குக் காரணம், இராஜகோபாலச்சாரியார் கட்டாய இந்தியை கொண்டு வந்தார். கட்டாய இந்தியைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்த அதே ஆச்சாரியார்,

அண்ணாவினுடைய முழக்கத்தை, பெரியார் ஈ.வெ.ரா. வினுடைய முழக்கத்தை யெல்லாம் கேட்ட பிறகு அவரே சொன்னார். இந்தி தமிழ்நாட்டிற்கு ஆகாது - இந்தி நம்முடைய மொழியாக, கட்டாய மொழியாக ஆக்கப்படுவதை நான் எதிர்க்கிறேன் என்று இராஜகோபாலாச்சாரியாரே இந்தி எதிர்ப்பாளராக மாறினார்.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், நான் 14 வயது வாலிபனாக அல்லது சிறுவனாக இருந்தபோது, இந்தியைக் கொண்டு வந்த ராஜகோபாலாச்சாரியார் எனக்கு 50 ஆண்டு காலமானபோது இந்தி வேண்டாம். இந்தியை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொன்னார் என்றால், காஞ்சிபுரத்திலே இருக்கின்ற பிராமண நண்பர்களுக்கு, நான் ஞாபகப்படுத்துகின்றேன். ராஜாஜியால் ஏற்றுக் கொள்ள முடியாத இந்தி - இந்தி வந்தால், தமிழர்கள் மூன்றாந்தர குடிமக்களாக ஆகிவிடுவார்கள் என்று உடனடியாக அதை எதிர்ப்பதற்கான ஆயத்தங்களைச் செய்தார் ராஜாஜி. இதுவே திராவிட இயக்கத்தினுடைய வெற்றியை உலகத்திற்கு அறிவிக்கின்ற ஒன்றாகும். நாம் சொல்லும்போது, சில பேருக்கு பிடித்தம் இல்லாமல் இருக்கும். ஆனால், அனுபவத்திலே பார்த்த பிறகுதான், அவர்கள் சொன்னது சரிதானே என்று ஒத்துக் கொள்ளத் தோன்றும். இப்படித்தான் நாமெல்லாம் திராவிடர்கள் என்று சொன்னபோது, நாங்கள் திராவிடர்கள் என்பதை ஒத்துக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள். இன்றைக்குக் காலையிலே கூட நான் ஒரு தொலைக்காட்சி சந்திப்பைக் கேட்டேன்.

அதில், நம்முடைய தம்பி சுப.வீரபாண்டியன், இன்னொரு தோழருடன் விவாதம் செய்தார். அந்த விவாதத்தில் திராவிடன் என்ற சொல்லை நான் ஏற்றுக்

கொள்ள மாட்டேன் என்று சுப.வீரபாண்டியனுக்கு எதிராக அமர்ந்து வாதிட்டவர் குறிப்பிட்டார். ஏன் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்று சுப.வீரபாண்டியன் கேட்டார். எங்கள் கட்சியிலே தீர்மானம் போட்டுவிட்டோம்.

திராவிட என்கின்ற அந்தச் சொல்லே கூடாது! என்று அவர் குறிப்பிட்டார். ஏன், திராவிட என்பது தமிழ் அல்லவா? தமிழன் ஒத்துக்கொள்ளாத சொல்லா? தமிழன் புறக்கணித்த சொல்லா? திராவிடத்தினுடைய உயர்வை அறிஞர்கள் சொல்கிறார்கள் - சரித்திரம் சொல்கிறது!

இந்த ஊரிலே பிறந்த எங்களுடைய தலைவர் அண்ணாதான், திராவிட நாடு என்ற வாரப் பத்திரிகையைத் தொடங்கியவர் (பலத்த கைதட்டல்) ஜஸ்டிஸ் கட்சியினுடைய நண்பர்கள் ஆதாரப்பூர்வமாக ஒத்துக்கொண்ட சொல் திராவிட என்பதாகும். திராவிட என்ற சொல்லே கிடையாது - அது யாரோ பெரியார் இராமசாமி விளித்த சொல் - அது அறிஞர் அண்ணா கொண்டு வந்த சொல் என்று யாராவது சொல்லுவார்களேயானால், அவர்கள் தயவு செய்து இந்தியாவினுடைய தேசியப் பாடலை ஒருமுறை கேட்கட்டும். அல்லது படித்துப் பார்க்கட்டும். ஜன கண மன அதிநாயக ஜெய ஹே

பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராத்தா
திராவிட உத்கல வங்கா.

இதிலே இடம் பெற்ற திராவிட எங்கிருந்து வந்தது? இந்தியாவினுடைய தேசியப் பாடல் இதுதான். அந்த தேசிய கீதத்தில்

திராவிட உத்கல வங்கா என்று வருகிறது. அதை ஏற்றுக் கொண்டு எழுந்து நின்று வணக்கம் செய்து மரியாதை செலுத்துகின்றவர்கள், திராவிட என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று சொன்னால், அதைக் கேட்பவர்களுக்குப் பைத்தியமா? அல்லது சொல்லுகின்றவர்களுக்கு பைத்தியமா? என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

வெளிநாட்டிலே இருந்து தமிழகத்திலே வந்து, தமிழ் கற்ற வெள்ளைக்கார பாதிரியார்கள், கால்டுவெல் போன்றவர்கள் திராவிட என்ற சொல்லை ஏற்றுக் கொண்டவர்கள். திராவிடத்தினுடைய ஆழம் - அகலம் - உயரம் இவற்றையெல்லாம் ஆய்ந்து அறிந்த அறிஞர் பெருமக்கள். அதை வரலாறு நிரூபிக்கிறது. சரித்திரம் சொல்லுகிறது. அதை மறந்துவிட முடியுமா?

திராவிட என்ற சொல்லையே நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். அந்தக் கட்சியில் திராவிட என்ற பெயர் இருந்தால், அவர்களோடு சேர மாட்டோம் என்று கூறுபவர்களுக்கு நான் சொல்லுகின்றேன் - தயவு செய்து இந்த நாட்டுப்பாடல் மாத்திரமல்ல, அதோடு சென்னைக் கடற்கரையிலே கொஞ்சம் நடந்து பாருங்கள் - கடற்கரையிலே இருக்கின்ற ஒரு கல்லூரி - பிரிசிடென்சி காலேஜ் - மாநிலக் கல்லூரி. அந்த கல்லூரியினுடைய வாசலில் ஒரு சிலை இருக்கும். அந்த சிலையைக் கொஞ்சம் உற்றுப்பார்த்தால் அதனுடைய அடிபீடத்தில், அந்தச் சிலையினுடைய பெயர் எழுதப்பட்டிருக்கிறது. டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் என்று பெயர் எழுதப்பட்டிருக்கிறது. எப்படி எழுதப்பட்டிருக்கிறது தெரியுமா? திராவிட வித்யாபூண டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் என்று எழுதப்பட்டிருக்கிறது.

அங்கே திராவிட எப்படி வந்தது? சாமி நாதய்யர் என்றால் வரலாமா? சாமான்யன் கருணாநிதி என்றால் வராதா? வரும். ஏனென்றால், திராவிட என்பது ஒரு கலாச்சாரம். ஒரு இனம். ஒரு இனத்தினுடைய பண்பாடு. இவைகளெல்லாம் சேர்ந்ததுதான் திராவிட என்கின்ற சொல்லுக்கு விளக்கம். திராவிடர்கள் இந்த நாட்டினுடைய பூர்வீகக்குடிகள்.

இன்னும் சொல்லப்போனால், ஆரியர்கள் வருவதற்கு முன்பே இந்தியாவிலே வாழ்ந்தவர்கள். ஆரியர்கள் இங்கே வந்து நுழைந்து திராவிடர்களை விரட்டினார்கள். என்றெல்லாம் வரலாறு இருக்கிறது. பள்ளிக்கூடத்திலே இருக்கின்ற வரலாறுகளிலே கூட தெள்ளத்தெளிவாக இந்தச் செய்தி சொல்லப்பட்டிருக்கிறது.

எனவே தான், திராவிட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்றெல்லாம் அழைப்பது ஏதோ பெரியார் கண்டுபிடித்த வார்த்தை என்பதற்காக அல்ல - அண்ணா கண்டுபிடித்த வார்த்தை என்பதால் அல்ல - நம்முடைய முப்பாட்டன் காலத்திலேயிருந்து நாம் பழகி வருகின்ற வார்த்தை. ஒரு இனத்தின் பெயர். மானமுள்ள ஒரு இனத்தின் பெயர். அதை மறந்து விடக்கூடாது. அந்த இனத்தின் சார்பாக நடைபெறுகின்ற எந்த இயக்கமானாலும், எந்த ஒரு நிகழ்ச்சியானாலும் அதிலே திராவிடம் புழங்குவதற்குப் பெருமை கொள்ள வேண்டும்.

தமிழ் இனத்திற்கு அடிநாதமாக

ஆணி வேராக இருப்பது திராவிட முழுக்கம்!

திராவிட நாடு திராவிடருக்கே! என்று ஒரு காலத்திலே ஒலித்தோம். இப்பொழுது இந்தியாவினுடைய

ஒற்றுமை, ஒருமைப்பாடு இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு, அண்ணாவினுடைய தீவிர சிந்தனைக்குப் பிறகு, அண்ணா அவர்களே கைப்பட எழுதிய அந்தப் புத்தகம், அவருடைய கையெழுத்தோடு கூடிய புத்தகம்; புத்தகம் முழுவதும் அச்சடிக்கப் பட்டதல்ல, அண்ணாவே எழுதி அப்படியே பிளாக் செய்த புத்தகம்; அதிலே அண்ணா திராவிட நாட்டைக் கைவிட்டுவிடவில்லை. திராவிட இனத்தைக் கைவிட்டு விடவில்லை. நாம் திராவிட நாடு திராவிடருக்கே என்பதைக் கைவிட்டாலும், அந்த இனத்துக்கு உரியவர்கள் என்பதை அழுத்தந்திருத்தமாக அண்ணாவே சொல்லுகிறார். நான் அதைத்தான் உங்களுக்கு நினை வூட்டுகின்றேன்.

திராவிட என்பது கற்பனைச் சொல் அல்ல. திராவிட என்பது நம்முடைய எழுச்சிக்கு, நம்முடைய இனத்தின் மானத்திற்கு - அந்த மானத்தைக் காப்பாற்ற நாம் கொண்டுள்ள உரமான கொள்கைகளுக்கு, உறுதியான இலட்சியங்களுக்கு அடிநாதமாக - ஆணிவேராக இருப்பதுதான் திராவிட என்கின்ற அந்த முழக்கம் - திராவிட என்கின்ற அந்த வார்த்தை, அந்தச் சொல். (கைதட்டல்) அந்த திராவிட என்பதை யார் எந்த இயக்கத் திற்கு இணைத்து வைத்துக் கொண்டாலும், நான் அவர்களைப் பாராட்டுகிறேன். நான் அவர்களை மதிக்கிறேன். ஆனால், திராவிட என்ற சொல்லை வைத்துக் கொண்டு திராவிடர் அல்லாதவர்களை மாத்திரமல்ல - திராவிடர்களையே யாரும் ஏமாற்றாதீர்கள். இவர்களும் திராவிட என்று சொல்லுகிறார்கள் என்று நம்பி யாரும் ஏமாந்து விடாமல் திராவிடர்களாகிய நீங்கள், தமிழ் மக்களாகிய நீங்கள் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்திலே நான் உங்களையெல்லாம் பார்க்கும்போது, இவ்வளவு எழுச்சி தேர்தலுக்கு முன்பு இல்லாத எழுச்சி (கைதட்டல்) இப்போது எப்படி வந்தது என்று பார்த்தேன். அடிபட்டால் தானே தெரியும் (கைதட்டல்) என்று நீங்கள் சொல்லாமல் சொல்லுவது எனக்குப் புரிகிறது. இதே காஞ்சிபுரத்தில் அண்ணா அவர்கள் தேர்தலில் நின்று வாக்கு கேட்க வீடுவீடாக வந்தபோது, தெருத்தெருவாக வந்தபோது அண்ணாவுடன் சேர்ந்து வந்தவன் நான். பல இடங்களிலே அண்ணா கையெடுத்துக் கும்பிட்டு, அப்படிக் கும்பிடுவதன் மூலம் தனக்கு வாக்களியுங்கள் என்று கேட்கின்ற ஜாடையை உணர்த்துவார். நான் பார்த்தேன்! உலகம் புகழக்கூடிய அறிஞர், யாராலும் ஒப்பிட முடியாத அளவுக்கு ஒப்பில்லாத மாணிக்கம், அத்தகைய அறிஞர்! அவர், இந்த காஞ்சிபுர வீதிகளிலே வாக்கு கேட்க வந்தபொழுது அவர் பின்னால் நாங்களும் வந்த பொழுது, அவர் கும்பிட்டு வாக்கு கேட்கும்போது, அவரைப் பார்க்காதது போல ஒதுங்கிக் கொண்ட மக்களையெல்லாம் அறிவேன். அதைப் பார்த்துவிட்டு அண்ணா சொன்னார். வா! கருணாநிதி, வேறு எங்காவது சற்றுத் தனியாக உட்காரலாம் என்றார். நான் புரிந்து கொண்டேன். அண்ணாவுக்கு அந்தத் தேர்தலிலே என்ன முடிவு ஏற்படும் என்பதைத் தெரிந்த காரணத்தால் இந்த மக்களைவிட்டு தொலைவிலே போய் இருக்கலாம் என்று சொல்லத் தோன்றியது.

ஆனால், அடுத்த ஆண்டு அதே அண்ணாதான் தமிழகத்தின் முதலமைச்சராக வந்து அமர்ந்தார். அதே அண்ணாதான் நாம் கேட்ட சென்னை ராஜ்ஜியம் என்கின்ற பெயரை, தமிழ்நாடு என்று மாற்றிக் கொடுத்தார். (கைதட்டல்)

அதே அண்ணா தான் இந்தியைக் கட்டாயம் படிக்க வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி, இனிமேல் தமிழ்நாட்டில் தமிழ் - ஆங்கிலம் இரண்டு மொழிதான். இந்திக்கு இடமில்லை என்று அறிவித்ததும் அதே அண்ணா தான். தேர்தல் தோல்வி கழகத்துக்கு அல்ல

வாக்காளர்களுக்குத்தான்!

எந்தக் காஞ்சிபுரத்தில் அவர் வணங்கும்போது, பதிலுக்கு வணங்காமல்கூட அவரை அவமதித்தார்களோ, அந்தக் காஞ்சிபுரத்து மக்கள் ஒரு முறை ஏற்பட்ட வேதனையை அதோடு மறந்துவிட்டீர்கள்.


இன்றைக்கு நாங்கள் உங்களைச் சந்திக்கின்ற அதே நேரத்தில் பல்லாயிரக்கணக்கில் நான் முதலில் குறிப்பிட்டதைப் போல எழுச்சி முரசங்களாக இங்கே நீங்கள் வீற்றிருக்கின்றீர்கள். வருகிற வழியெல்லாம் உங்களுடைய முழக்கங்கள், வருகிற வழியெல்லாம் நீங்கள் செய்த அலங்காரங்கள் - இவைகள் அத்தனையையும் படிக்க வேண்டுமேயானால், இன்றைக்குக் கிடைத்திருக்கின்ற தோல்வி எங்களுக்கல்ல - உங்களுக்கு! (கைதட்டல்) நீங்கள் தேடிக் கொண்ட தோல்வி! நீங்களே வரவழைத்துக் கொண்ட தோல்வி! (கைதட்டல்)

பேருந்திலே ஏறும்போது அந்தத் தோல்வியினுடைய எடைதெரியும்உங்களுக்கு! கடையில்போய்சாமான்வாங்கும்போது அந்த தோல்வியினுடைய கனம் தெரியும் உங்களுக்கு! ஆகவே, தோற்றது கழகம் அல்ல - தோற்றது வாக்காளர்களாகிய நீங்கள்.

தாங்கள் தவறு செய்துவிட்டதை உணர்ந்தவர்கள், பிறகு தவறே செய்யமாட்டார்கள் வாழ்க்கை முழுவதும். அப்படிப்பட்ட ஒரு பாடம் காஞ்சிபுரத்திலே உள்ள உங்களுக்கு மாத்திரமல்ல - தமிழ்நாட்டிலே உள்ள மக்களுக்கெல்லாம் கிடைத்திருக்கின்றது. அந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கின்ற நீங்கள் அந்தப் பாடத்திற்கு மதிப்பளித்து, அந்தப் பாடத்தை மறவாமல் எதிர்காலத்திலாவது இப்போது செய்த தவறை, இனியும் செய்ய மாட்டோம் என்ற மன உறுதியோடு உங்களையும் காப்பாற்றிக் கொண்டு, இந்தச் சமுதாயத்தினுடைய எதிர்கால தலைமுறையையும் காப்பாற்றுங்கள்.

அவர்களையெல்லாம் தமிழர்களாக, திராவிடர்களாக, பகுத்தறிவுவாதிகளாக, அண்ணாவின் தம்பிகளாக, என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளாக உங்களையெல் லாம் காணுகின்றேன் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு வழிநெடுக நீங்கள் அளித்த வரவேற்பிற்கு நன்றி கூறி, நீங்கள் அடித்தாலும் - அணைத்தாலும் காஞ்சிபுரம் மக்களை நான் மறக்க மாட்டேன் என்ற உறுதியை உங்களுக்குச் சொல்லி, உங்களிலே நான் ஒருவன். நாமெல்லாம் ஒரே இனம். இந்த இனம் ஏற்றம் பெற அனைவரும் சேர்ந்து பாடுபடுவோம் என்று உரைத்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.



வெளியீடு :

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க.